ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1812/1 - 2013 මැයි මස 27 වැනි සඳුදා - 2013.05.27

*1812/1 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு மே மாதம் 27 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

இணைப்பு 01.

எல். டி. பி. /......... 2013.

**விவாகப் பதிவுக் கட்டளைச் சட்டம்**

(112 ஆவது அத்தியாயமான) விவாகப் பதிவுக் கட்டளைச் சட்டத்தின் 7 மற்றும் 51 ஆம் பிரிவுகளின் கீழ் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சர் அவர்களால் தயாரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

டபிள்யூ. டி. ஜே. செனவிரத்ன,
பொது நிர்வாக,
உள்நாட்டலுவல்கள் அமைச்சர்.

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
கொழும்பு,
2013, மே 15.

(விதிகள்) நடைமுறைகள்

2004, திசெம்பர் 16 ஆந் திகதிய 1371/25 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானி மூலம் கடைசியாக திருத்தப்பட்ட 1914, செத்தெம்பர் மாதம் 18 ஆந் திகதிய 6662 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட, விவாகப் பதிவுக் கட்டளைச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகளில், அதன் அட்டவணையினை நீக்கி அதற்கு பதிலாக கீழ் காணப்படும் பகுதியினை பதிலீடு செய்வதன் மூலம் இத்தால் திருத்தஞ் செய்யப்படுகின்றது.

**அட்டவணை**

| | I ஆம் நிரல் | II ஆம் நிரல் ரூபா சதம் |
|---|---|---|
| 1. | பிரதி ஒன்றுக்காக விண்ணப்பிக்கின்றபோது பதிவேடு தேடுதல், அவசியமில்லாத சந்தர்ப்பத்தில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்றோ அல்லது சுருக்கப் பிரதியொன்றோ அல்லது பதிவு செய்யப்படவில்லை என்ற சான்றொன்றோ வழங்குவதற்காக. | 100.00 |
| 2. | பிரதி ஒன்றுக்காக விண்ணப்பிக்கும் போது, 2 வருடங்களுக்கு மேற்படாத காலப்பகுதியில் பதிவேடு தேடுதல், தேவையான சந்தர்ப்பத்தில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்றோ அல்லது சுருக்கப் பிரதியொன்றோ அல்லது பதிவு செய்யப்படவில்லை என்ற சான்றொன்றோ விநியோகிப்பதற்காக. | 200.00 |

6- 165/1

இணைப்பு (02) (i).

எல். டி. பி. /........... 2013.

**கண்டிய விவாகம் மற்றும் விவாகரத்துச் சட்டம்**

(113 ஆவது அத்தியாயமான) கண்டிய விவாகம் மற்றும் விவாகரத்துச் சட்டத்தின் 16, 19, 22, 23, 34, 54 மற்றும் 56 ஆம் பிரிவுகளின் கீழ் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சர் அவர்களால் தயாரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

டபிள்யூ. டி. ஜே. செனவிரத்ன,
பொது நிர்வாக,
உள்நாட்டலுவல்கள் அமைச்சர்.

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
கொழும்பு,
2013, மே 15.

**ஒழுங்குவிதிகள்**

1. இவ்வொழுங்குவிதிகள் 2013 ஆம் ஆண்டின் கண்டிய விவாகம் மற்றும் விவாகரத்து (கட்டணங்கள்) ஒழுங்குவிதிகள் என அடையாளப்படுத்தப்படுகிறது.

2. இங்கு அட்டவணையில் 1 ஆவது நிரலில் உறுதியாக குறிப்பிடப்பட்ட, மேற்குறிப்பிடப்பட்ட சட்டத்தின் கீழான முத்திரைக் கட்டணங்கள் அல்லது வேறு ஏதாவது கட்டணங்கள் II ஆவது நிரலில் உறுதியாக குறிப்பிடப்பட்ட நபரின் மூலம், அக்குறிப்பில் III ஆவது நிரலில் உறுதியாக குறிப்பிடப்பட்ட உரிய அளவில் செலுத்தப்படல் வேண்டும்.

3. (1) இச்சட்டத்தின் கீழ் பணம் அல்லது வேறு ஏதாவது கொடுப்பனவிற்குரியதான 47 ஆவது பிரிவின் கீழ் தயாரிக்கப்பட்ட, முன்னர் செய்யப்பட்ட திருத்தங்களுக்குரியவாறு, 1954, யூலை மாதம் 16 ஆம் திகதிய, 10693 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகள் இத்தால் பதிலிடப்படுகின்றது.

(2) 1 ஆவது பந்தியில் பதிலிடப்பட்ட ஒழுங்குவிதிகளின் கீழ் செய்யப்பட்ட ஏதாவது நடவடிக்கை அல்லது நிகழ்வு அனைத்து செயற்பாடுகளுக்காகவும் செல்லுபடியாகும் மற்றும் அதிகாரமுடையது எனக் கொள்க.

***அட்டவணை***

**முத்திரைக் கட்டணங்களும் ஏனைய கட்டணங்களும்**

(3 ஆவது விதி)

| | I ஆம் நிரல்<br>விடயம் | II ஆம் நிரல்<br>செலுத்த வேண்டியவர்கள் | III ஆம் நிரல்<br>தொகை<br>ரூபா சதம் |
|---|---|---|---|
| 1. | 16 ஆவது பிரிவின் (1) மற்றும் (2) ஆம் பந்திகளின் கீழ் பிரிவுப் பதிவுக்காரரொருவரிடம் சமர்ப்பிக்கின்ற விவாக அறிவித்தல் ஒன்றிற்கான கட்டணம். | விவாக அறிவித்தலை கையளிக்கும் திறத்தவர் | 100.00 |
| 2. | 16 (3) ஆம் பிரிவின் கீழான விவாக அறிவித்தல் ஒன்றிற்கான கட்டணம். | விவாக அறிவித்தலைக் கையளிக்கும் திறத்தவர் | 100.00 |
| 3. | 16 (4) ஆம் பிரிவின் கீழ் விவாக அறிவித்தல் ஒன்றிற்கான கட்டணம். | விவாக அறிவித்தலைக் கையளிக்கும் திறத்தவர் | 100.00 |
| 4. | 16 ஆம் பிரிவின் கீழ் மேலதிக மாவட்ட பதிவாளர் அல்லது மாவட்ட பதிவாளரிடத்தில் கையளிக்கப்படும் விவாக அறிவித்தல் பத்திரம் ஒன்றிற்கான கட்டணம். | விவாக அறிவித்தலைக் கையளிக்கும் திறத்தவர் | 100.00 |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| | I ஆம் நிரல் விடயம் | II ஆம் நிரல் செலுத்த வேண்டியவர்கள் | III ஆம் நிரல் தொகை ரூபா சதம் |
|---|---|---|---|
| 5. | 24 ஆம் பிரிவின் கீழ் பதிவாளர் தமது அலுவலகம் தவிர்ந்த வேறு ஒரு இடத்தில் விவாகத்தினை நிறைவேற்றி பதிவு செய்வதற்கான வேண்டுகோளுக்கான கட்டணம். | விண்ணப்பிக்கும் திறத்தவர் | 3,500.00 |
| 6. | 34 ஆம் பிரிவின் கீழ் விவாகமொன்று இரத்துச் செய்வதற்கான விண்ணப் பப்படிவத்தின் பேரால் மாவட்டச் செயலாளர் மூலம் செய்யப்பட்ட கட்டளை யொன்றிற்கு எதிராக எடுக்கப்படும் மேன்முறையீட்டுக்கான கட்டணம். | மேன்முறையீடு செய்பவர் | 100.00 |
| 7. | பதிவேடு தேடுதல் தேவைப்படாத தொரு சந்தர்ப்பத்தில் 56 ஆவது பிரிவின் கீழ் விவாகம் அல்லது விவாகரத்தொன்று பதிவு செய்கின்ற ஆவணத்தின் அத் தாட்சிப்படுத்தப்பட்ட பிரதி ஒன்றிற்காக அல்லது பதிவு செய்யப்படாத சான்றித ழொன்றிற்கான எழுத்துமூல கோரிக்கை பற்றிய கட்டணம் . | விண்ணப்பதாரர் | 100.00 |
| 8. | இரண்டு (2) வருடங்களுக்கு மேற்படாத காலப்பகுதியின் பதிவேடு தேடுதல், தேவையான சந்தர்ப்பத்தில் 56 ஆவது பிரிவின் கீழ் விவாகமொன்று அல்லது விவாகரத்தொன்றின் பதிவுக்குறிப்பின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்றிற் காகவோ அல்லது பதிவு செய்யப்படாத சான்றிதழொன்றிற்காகவோ எழுத்துமூல வேண்டுகோள் தொடர்பாக கட்டணம். | விண்ணப்பதாரர் | 200.00 |
| 9. | 54 ஆவது பிரிவின் கீழ் மேலதிக மாவட்ட பதிவாளர் அல்லது மாவட்ட பதிவாளர் மூலம் கண்டிய விவாகத்தினை நிறை வேற்றல் மற்றும் பதிவு செய்வதற்கான கட்டணங்கள். | | |
| | (அ) அவரின் அலுவலகத்தில் | விண்ணப்பதாரர் | 750.00 |
| | (ஆ) அவரின் அலுவலகத்திற்கு வெளியில் ஏதாவதொரு அதிகாரம் பெற்ற இடத்தில். | விண்ணப்பதாரர் | 1,500.00 |
| 10. | 54 ஆவது பிரிவின் கீழ் பிரிவு பதிவாளர் மூலம் கண்டிய விவாகத் தினை நிறைவேற்றல் மற்றும் பதிவு செய்வதற்கான கட்டணங்கள். | | |
| | (அ) அவரின் அலுவலகத்தில் | விண்ணப்பதாரர் | 750.00 |
| | (ஆ) அவரின் அலுவலகத்திற்கு வெளியில் ஏதாவதொரு அதிகாரம் பெற்ற இடத்தில். | விண்ணப்பதாரர் | 1,500.00 |

இணைப்பு 03 (i).

எல். டி. பி. /........ 2013.

**முஸ்லிம் விவாகம் மற்றும் விவாகரத்துச் சட்டம்**

(115 ஆவது அத்தியாயமான) முஸ்லிம் விவாகம் மற்றும் விவாகரத்துச் சட்டத்தின் 94 ஆம் பிரிவின் கீழ் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சர் அவர்களால் தயாரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

டபிள்யூ. டி. ஜே. செனவிரத்ன,
பொது நிர்வாக,
உள்நாட்டலுவல்கள் அமைச்சர்.

பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
கொழும்பு,
2013, மே 15.

கட்டளை

2004, திசெம்பர் 16 ஆந் திகதிய 1371/25 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானி மூலம் கடைசியாக திருத்தப்பட்ட 1954, யூலை மாதம் 16 ஆந் திகதிய 10693 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட, முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்தின் கட்டளை இங்கு கீழ் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் இத்தால் மேலும் திருத்தஞ் செய்யப்படுகின்றது.

**"அ" அட்டவணை**

| | I ஆம் நிரல் | II ஆம் நிரல்<br>ரூபா சதம் |
|---|---|---|
| 3. | ஒரு பிரதேசத்தின் பதிவாளர் வேறு பிரதேசத்தில் விவாகத்தினை பதிவு செய்வதற்கு அனுமதி கொடுப்பதற்கான கட்டணம். | 3,500.00 |
| 4. | மணமகனால் 18 (1) ஆம் பிரிவின் கீழ் செய்யப்படும் பிரதிக்கினைக்கான கட்டணம். | 100.00 |
| 5. | மணமகளின் 'வலி' யினால் 18 (1) ஆம் பிரிவின் கீழ் செய்யப்படும் பிரதிக்கினைக்கான கட்டணம். | 100.00 |
| 19. | விண்ணப்பத்தினது பதிவேடு தேடுதல் தேவையில்லாத போது விவாகம் அல்லது விவாகரத்துச் சான்றிதழொன்று ஏதாவது பதிவுக் குறிப்பின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியோ, பதிவு செய்யப்படவில்லையென்ற சான்றிதழ் ஒன்றோ விநியோகிப்பதற்கான கட்டணம். | 100.00 |
| 20. | இரண்டு வருடங்களுக்கு மேற்படாத காலப்பகுதிக்குள் பதிவேடு தேடுதல் தேவைப்படும் சந்தர்ப்பத்தில் விவாகம் அல்லது விவாகரத்து ஆவணமொன்றின் ஏதாவது குறிப்புக்களிலிருந்து அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்று வழங்குவதற்கான கட்டணம். | 200.00 |

இணைப்பு 03 (ii).

1. அதில் "இ" அட்டவணையினை நீக்கி, அதற்குப் பதிலாக கீழ் காணப்படும் பகுதியினை உள்ளிடுவதன் மூலம்.

**"இ" அட்டவணை**

பதிவாளர் ஒருவருக்கு செலுத்தப்படவேண்டிய கட்டணம்

| I ஆம் நிரல்<br>செலுத்த வேண்டியது | II ஆம் நிரல்<br>விடயம் | III ஆம் நிரல்<br>தொகை<br>ரூபா சதம் |
|---|---|---|
| மணமகன் | விகாகம் பதிவு செய்தல் | 1,500.00 |

இணைப்பு 4.

எல். டி. பி. /........ 2013.

**பிறப்புக்கள் மற்றும் இறப்புக்கள் பதிவுச் சட்டம்**

(110 ஆவது அத்தியாயமான) பிறப்புக்கள் மற்றும் இறப்புக்கள் பதிவுச் சட்டத்தின் 69 ஆவது பிரிவின் கீழ் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சர் அவர்களால் தயாரிக்கப்பட்டு பாராளுமன்றத்தினால் அனுமதிக்கப்பட்ட (விதிகள்) நடைமுறைகள்.

டபிள்யூ. டி. ஜே. செனவிரத்ன,
பொது நிர்வாக,
உள்நாட்டலுவல்கள் அமைச்சர்.

பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
கொழும்பு,
2013, மே 15.

(விதிகள்) நடைமுறைகள்

2004, திசெம்பர் 16 ஆந் திகதிய 1371/25 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானி மூலம் கடைசியாக திருத்தப்பட்ட 1954, யூலை மாதம் 16 ஆந் திகதிய 10693 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட, 1953 ஆம் ஆண்டின் பிறப்புக்கள் மற்றும் இறப்புக்கள் பதிவு விதிகளில், 37 ஆவது நிரலில் குறிப்பிடப்பட்ட முத்திரைக் கட்டணம் மற்றும் ஏனைய கட்டணங்கள் அடங்கிய மூன்றாவது அட்டவணைக்குப் பதிலாக பின்வரும் புதிய அட்டவணையினை இடுவதன் மூலம் அவ்விதி இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது.

**மூன்றாவது அட்டவணை**

**கட்டணம் மற்றும் ஏனைய கட்டணங்கள்**

(37 ஆவது விதிகள்)

| | I ஆம் நிரல் | II ஆம் நிரல் ரூபா சதம் |
|---|---|---|
| 1. | பிரதி ஒன்றுக்காக விண்ணப்பிக்கின்ற போது பதிவேடு தேடுதல், அவசியமில்லாத சந்தர்ப்பத்தில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்றோ அல்லது சுருக்கப் பிரதியொன்றோ அல்லது பதிவு செய்யப்படவில்லை என்ற சான்றொன்றோ வழங்குவதற்காக. | 100.00 |
| 2. | பிரதி ஒன்றுக்காக விண்ணப்பிக்கும் போது, 2 வருடங்களுக்கு மேற்படாத காலப்பகுதியில் பதிவேடு தேடுதல், தேவையான சந்தர்ப்பத்தில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்றோ அல்லது சுருக்கப் பிரதியொன்றோ அல்லது பதிவு செய்யப்படவில்லை என்ற சான்றொன்றோ விநியோகிப்பதற்காக. | 200.00 |

6- 165/4